மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வழக்கமாக பேரவைத் தலைவர் முடிவு செய்வதுதான். பார்த்துக்கொள்ளலாம், முன்னுதாரணங்கள் உள்ளன. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) பார்த்துக் கொள்ளலாம், உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்பு

திருவண்ணாமலை மாவட்டம், துணிநூல் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் துணிநூல் கல்லூரி துவக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமது பெரும் செயலால், பெரும் திறனால், பெரும் மனதால், தமிழ்நாட்டின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்கி, துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விரிவான விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 3] [திரு. ஓ.எஸ். மணியன்]

அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டத்தில் 5 பட்டு கூட்டுறவுச் சங்கங்களும், 22 பருத்தி கூட்டுறவுச் சங்கங்களும், 9,800 கைத்தறிகளுடன் இயங்கி வருகின்றன. ஆரணி ஒண்ணுபுரம் பகுதியில் சுமார் 3,000–க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

- ஜவுளித் தொழில் தொடர்புடைய தொழில்நுட்பம் தொடர்பான படிப்புகள் பயில்வதற்காக இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகம், சேலத்தில் இயங்கி வருகிறது.
- இந்தக் கல்லூரியில் கைத்தறி மற்றும் துணிநூல் பட்டயப் படிப்பு, பி.டெக் படிப்பு போன்ற தொழில்நுட்பப் பாடப் பிரிவுகள் உள்ளன.
- நெசவாளர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கும்விதமாக, சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தால் நடத்தப்படும் மூன்றாண்டு கைத்தறி மற்றும் துணிநூல் பட்டயப் படிப்பிற்கு மாணவ–மாணவியர்கள் தேர்வு செய்யப்படும்போது, நெசவாளர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இந்தப் பயிலகத்தில் மொத்தம் 47 மாணாக்கர்கள் பயிற்சி பயின்று வருகின்றனர். (தமிழ்நாட்டிலிருந்து 30 பேரும், ஆந்திராவிலிருந்து 4 பேரும், கர்நாடகாவிலிருந்து 8 பேரும், கேரளாவிலிருந்து 5 பேரும்) அவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக முதல் வருட மாணாக்கர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.1,000/–, இரண்டாம் வருட மாணாக்கர்களுக்கு ரூ.1,100/–, மூன்றாம் வருட மாணாக்கர்களுக்கு ரூ.1,200/–, 50:50 என்ற சதவிகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்பட்டு வருகிறது. புத்தகச் செலவினமாக ஆண்டொன்றுக்கு ரூ.1,000/– வீதம் மற்றும் கல்விச் சுற்றுலா உதவித் தொகை ரூ.1,000/– வீதம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஆந்திர மாநிலத்தில் உள்ள வெங்கடகிரி, கர்நாடகா மாநிலம் கடாக், கேரள மாநிலத்தில் உள்ள கண்ணூர் போன்ற இடங்களில் உள்ள இந்திய தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்களிலும் தமிழக அரசின் இட ஒதுக்கீட்டில் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

[திரு. ஓ.எஸ். மணியன்] [2016 ஆகஸ்ட் 3

- இது தவிர, சேலம், நாமக்கல் மற்றும் கோவையில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் தொழில்நுட்பக் கல்லூரி, சென்னையில் உள்ள அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, சென்னையில் உள்ள தேசிய அலங்கார வடிவமைப்பு தொழில்நுட்ப நிலையம் மற்றும் பல்வேறு தனியார் கல்லூரிகளிலும் ஜவுளித் தொழில் தொடர்பான தொழில்நுட்பப் பாடப் பிரிவுகளுக்கு பட்டய மற்றும் பட்டப் படிப்புகள் வழங்கப்படுகின்றன.

- எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் மேற்கண்ட பயிற்சி நிலையங்கள்/ கல்லூரிகளில் சேர்ந்து அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் படிப்பினைப் பெறலாம்.

- மேலும், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி, ஒண்ணுபுரம், செய்யாறு போன்ற பகுதிகளில் உள்ள நெசவாளர்களின் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக மைய அரசின் திட்டமான வட்டார நிலை கைத்தறி குழும திட்டத்தின்கீழ், "மேற்கு ஆரணி வட்டாரக் குழுமம்" (West Arni Cluster) அமைக்க ரூ.142.39 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு மைய அரசு 8–10–2015–ல் ஒப்புதல் அளித்து, முதல் தவணையாக ரூ.63.355 இலட்சம் விடுவித்துள்ளது. இத்திட்டத்தில், நெசவாளர்களின் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக புதிய தறிகள், தறி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதோடு, புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய நெசவுப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

- ஆரணி பகுதியில் கைத்தறி பட்டு ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான முயற்சியாக அப்பகுதி தொழில்முனைவோர்கள் முன்வந்து 37 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் துணிநூல் கல்லூரி அமைப்பது குறித்தான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. மேலும், தேவைப்படின், இக்கோரிக்கை உரிய தருணத்தில் அரசால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் உயர் கல்வித் துறையின்மூலம் கொள்கை அளவிலான முடிவு எடுக்கப்படும்.

2016 ஆகஸ்ட் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, கேள்வி கேளுங்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதெல்லாம், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலை, ஆரணி, செய்யாறு, வந்தவாசி, போளூர் மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஆகிய வட்டங்களில் சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பட்டு மற்றும் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில்தான் ஜீவாதாரமாக விளங்குகிறது. இந்தத் தொழிலில் ஈடுபடுகின்ற குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் நெசவுத் தொழிலை நவீன முறையில் செய்யவும், புதிய தொழில்நுட்பங்களை, அதாவது* new technology *கொண்டு இத்தொழிலை விரிவுபடுத்தவும், பொருளாதாரத்தை ஈட்டவும் விரும்புகிறார்கள். இதற்காக, திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து வருடந்தோறும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இத்தொழில் சம்பந்தப்பட்ட கல்வியைக் கற்பதற்காக, அதாவது,* Textile technology, Design and Weaving Textile Processing, Man made fibre technology, Fashion technology, Garments technology, Marketing and Management *போன்ற பட்டயப் படிப்புகளைப் பயில்வதற்காக குமாரபாளையம், திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய பகுதிகளுக்கு இங்கிருந்து செல்கிறார்கள். தற்போது திருவண்ணாமலை பகுதியில் ஆயத்த ஆடை–*garments *தொழில் விரிவடைந்து வருகிறது. சென்னையைத் தவிர்த்து, இங்கிருந்து கோயம்புத்தூர், திருப்பூர் ஆகிய பகுதிகளுக்கு பெரும்பான்மையான மாணவ, மாணவிகள் போகின்ற நிலை இப்போது இருக்கிறது.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, தமிழ்நாட்டில் இருக்கின்ற நகரங்கள், பக்கத்திலே இருக்கின்ற கர்நாடகாவிலே இருக்கின்ற பெங்களூரு, சென்னையிலே பிரபலமாக இருக்கின்ற பல ஜவுளிக் கடைகளுக்கு வருகின்ற பட்டுப் புடவைகள், கைத்தறி சேலைகளெல்லாம் திருவண்ணாமலை மாவட்டப் பகுதியிலிருந்துதான்

[திரு. எ.வ. வேலு] [2016 ஆகஸ்ட் 3

பெரும்பான்மையாக உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, அது காலம்காலமாக குலத்தொழிலாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய வாரிசுகள் அந்தத் துறையிலேயே தங்களை ஈடுபடுத்திக்கொண்டு new technology மூலமாக பொருளாதாரத்தை ஈட்டுவதற்கும், new technology மூலமாக அவற்றை விரிவுபடுத்துவதற்கும், பெரும்பாலான நெசவாளர் குடும்பங்கள் விரும்புகின்ற காரணத்தால், திருவண்ணாமலை நகரிலோ அல்லது ஆரணியிலோ ஒரு Textile கல்லூரியைத் தொடங்க இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், இந்த அவையில் ஒரு தவறான தகவலைப் பதிவு செய்திருக்கிறார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் பட்டு மற்றும் பருத்தி இரண்டிலும் மொத்தம் இயங்குகின்ற கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 27 மட்டும்தான். கைத்தறி பருத்திச் சங்கங்கள் 22, கைத்தறி பட்டுச் சங்கங்கள் 5, மொத்தம் 27. இதில் பருத்தி கூட்டுறவு நெசவாளர்கள் 4,251 பேர். பட்டு கூட்டுறவு நெசவாளர்கள் 5,549 பேர். மொத்தம் 9,800 பேர். பருத்தி தனியார் நெசவாளர்கள் 1,000 பேர், பட்டு தனியார் நெசவாளர்கள் 8,000 பேர். மொத்தம் 9,000 பேர். திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தமே 18,800 நெசவாளர்கள்தான் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

அதுமட்டுமல்ல, தாலுகா வாரியாக சங்கங்களின் எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது திருவண்ணாமலையில் ஒரேயொரு சங்கம்தான் செயல்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், பெருமைக்குரிய ஒரு செய்தி என்னவென்று கேட்டால், திருவண்ணாமலையில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் இருக்கின்ற காரணத்தால், சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகின்ற காரணத்தால், அங்கேயுள்ள கோ–ஆப்டெக்ஸ் கடையில் 444 இலட்சம் ரூபாய்க்கு துணிகள் விற்பனையாகியிருக்கிறது என்கின்ற பெருமையான

2016 ஆகஸ்ட் 3] [திரு. ஓ.எஸ். மணியன்]

செய்தியையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்கள் படிப்பதற்கு தொலைதூரம் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். தமிழ்நாட்டில் ஜவுளி தொழில்நுட்ப பட்டப் படிப்பு உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை 10. இந்தக் கல்லூரிகளில் B.E., B.Tech., போன்ற பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர், ஜெயா பொறியியல் கல்லூரி-சென்னை, கே.எஸ்.ஆர். ரங்கசாமி பொறியியல் கல்லூரி-திருச்செங்கோடு, எஸ்.எஸ்.எம். பொறியியல் கல்லூரி-குமாரபாளையம்-நாமக்கல், பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரி-சத்தியமங்கலம்-ஈரோடு, குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி-கோயம்புத்தூர், பார்க் தொழில்நுட்பக் கல்லூரி-கோயம்புத்தூர், பாவேந்தர் பாரதிதாசன் தொழில்நுட்பக் கல்லூரி-திருச்சி, ஆர்.வி.எஸ். தொழில்நுட்பக் கல்லூரி-திண்டுக்கல், இதுமட்டுமல்லாமல் பாலிடெக்னிக் கல்லூரிகள் 21 தமிழ்நாட்டில் Textile Technology படிப்புக்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை, அன்னை ஜே.கே.கே. சம்பூரணி அம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி-தூக்கநாயக்கன்பாளையம், அண்ணாமலை பாலிடெக்னிக் கல்லூரி-பாதூர், இ.ஐ.டி. பாலிடெக்னிக் கல்லூரி-கவுந்தப்பாடி, கோமதியம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி-மலையடிக்குறிச்சி, ஜி.ஆர்.ஜி. பாலிடெக்னிக் கல்லூரி-புக்கேபாளையம், Institute of Textile Technology-தரமணி, கற்பகம் பாலிடெக்னிக் கல்லூரி-ஈச்சனாரி, நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி-பொள்ளாச்சி, நஞ்சப்பா பாலிடெக்னிக் கல்லூரி-கருமத்தம்பட்டி, பி.ஏ.ஜி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக் கல்லூரி-ராஜபாளையம், பசும்பொன் நேதாஜி பாலிடெக்னிக் கல்லூரி-மேலநீலிதநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்; பெரியார் பல்கலைக் கழகம்-சேலம். பி.ஏ.ஜி. பாலிடெக்னிக் கல்லூரி-கோயம்புத்தூர்; ஆர்.வி.எஸ். பாலிடெக்னிக் கல்லூரி-திண்டுக்கல், ரத்தினவேல் சுப்ரமணியம் பாலிடெக்னிக் கல்லூரி-திண்டுக்கல், ருத்ரவேணி முத்துசாமி பாலிடெக்னிக் கல்லூரி-பாலம்பட்டி, ருக்மணி சண்முகம் பாலிடெக்னிக் கல்லூரி-வரிச்சூர், எஸ்.எஸ்.எம். பாலிடெக்னிக் கல்லூரி-குமாரபாளையம், சவுடாம்பிகை பாலிடெக்னிக் கல்லூரி-சொக்கலிங்கபுரம், காந்தி கிராம பல்கலைக்கழகம்-காந்தி கிராமம், தியாகராஜா பாலிடெக்னிக் கல்லூரி-சேலம்.

[திரு. ஓ.எஸ். மணியன்] [2016 ஆகஸ்ட் 3

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமட்டுமல்ல, இந்திய கைத்தறி டெக்ஸ்டைல்ஸ் கல்லூரி, சேலத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலாம் ஆண்டு படிக்கிற மாணவர்களுக்கு ரூபாய் ஆயிரமும், இரண்டாம் ஆண்டு படிக்கிற மாணவர்களுக்கு ரூ.1,100–ம், மூன்றாம் ஆண்டு படிக்கிற மாணவர்களுக்கு ரூ.1,200–ம், பாடப் புத்தகங்களுக்காக ரூபாய் ஆயிரமும், அவர்கள் சுற்றுலா சென்று வருவதற்காக ரூபாய் ஆயிரமும் உதவித் தொகையாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு மட்டும், 2015–2016 ஆம் ஆண்டில் 114 மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 9.12 இலட்சம் கல்வி உதவித் தொகையாக டெக்ஸ்டைல்ஸ் டெக்னாலஜி படிக்கின்ற மாணவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, அவர்கள். (குறுக்கீடு) உங்களுடைய உறுப்பினரைப் பேசாமல் உட்காரச் சொல்லுங்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் இல்லையென்று மறுக்கவில்லை. நீங்களே சொல்லிவிட்டீர்கள்; நீங்கள் சொன்ன பட்டியலின்படி கோயம்புத்தூரிலும், திருப்பூரிலும் கல்லூரிகள் இருக்கின்றன. வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, பக்கத்தில் இருக்கிற கிருஷ்ணகிரி, கடலூர் போன்ற வட மாவட்டங்களில் கல்லூரிகளே இல்லை. அதனால்தான் நான் திருவண்ணாமலையில் துவங்கவேண்டுமென்று, சொன்னேன்.*

2016 ஆகஸ்ட் 3] [திரு. எ.வ. வேலு]

அதாவது கூட்டுறவு சொசைட்டிகள் இத்தனை இருக்கின்றன என்று பதிவைச் சொல்கிறீர்கள். அந்தப் பதிவினை செய்கிற நெசவாளர்கள் மிகவும் குறைவு. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்யாமல் பல நெசவுத் தொழிலாளர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். எனவே, அதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் துணிநூல் கல்லூரி துவங்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வடமாவட்டத்திலே, திருவண்ணாமலையிலே, ஆரணியிலே ஒரு துணிநூல் கல்லூரி துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம் அருகிலே எந்தக் கல்லூரியும் இல்லையென்று இங்கே சொன்னார். அண்ணாமலை பாலிடெக்னிக் கல்லூரி-பாதூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டத்திலே இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பக்கத்திலே எந்தக் கல்லூரியும் இல்லையென்று சொன்னார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற நெசவாளர் சங்கங்களின் அடிப்படையிலும், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற நெசவாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் பார்க்கிறபோது, திருவண்ணாமலை மாவட்டத்தில் டெக்ஸ்டைல்ஸ் டெக்னாலஜி கல்லூரியைத் துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அவ்வாறு அவசியம் எழும்பட்சத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் அனுமதி பெற்று, அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை. (குறுக்கீடு) இருங்கள், நான்*

அதையெல்லாம் அனுமதிக்க முடியாது திரு. சக்கரபாணி. (குறுக்கீடு) இருங்கள், உட்காருங்கள். நான் Zero hour*–ல் எதிர்க் கட்சித் தலைவருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன். அதற்கு மேலேயும் அவர் பேசுவதற்கு வாய்ப்பு கேட்டிருந்தால் நான் வாய்ப்பு கொடுத்திருப்பேன். நான் அடுத்த அலுவலுக்குச் சென்று விட்டேன். கவன ஈர்ப்பும் முடிந்து விட்டது. இப்போது மீண்டும் நீங்கள்* raise *செய்து நான் வாய்ப்பளித்தால் அது தவறாகப் போய்விடும். (குறுக்கீடு) அவர் தயாராக இருந்தாலும் நான் அனுமதிக்க முடியாது. அடுத்த அலுவலுக்குச் சென்று விட்டேன். நான் ஏற்கெனவே நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி ஒரு நிகழ்ச்சியை எடுத்து முடித்துவிட்டேன். இப்போது இரண்டாவது நிகழ்ச்சிக்கு சென்று விட்டேன். (குறுக்கீடு) இப்போதெல்லாம்* raise *பண்ண முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு)*

முற்பகல் 11–15

4. மானியக் கோரிக்கைகள், 2016—2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

(ஆ) கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

.....

(அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்றாடம் வணங்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*